# நவகிரகங்களின் வரலாறு

## சூரிய பகவான்



ஆயிரம் கரங்கள் மறைத்தாலும், ஆதவன் ஒளி மறைவது இல்லை என்ற வரிகளுக்கு உரிய நவகிரகங்களின் தலைமை கிரகமான சூரிய பகவானின் பண்புகளைப் பற்றிப் பார்ப்போம்.

### சூரிய பகவானின் பண்புகள் :

- ஒளியை கொண்டவர்.
- பிரபஞ்சத்தில் உள்ள உயிர்களின் உற்பத்திக்கு காரணமானவர்.
- ஆரஞ்சு வண்ணத்தை சொந்தம் கொண்டவர்.
- தன்னுடன் இணையும் அனைத்து கிரகங்களையும் அஸ்தமனம் செய்பவர்.

## சூரிய பகவான் வரலாறு :

பிரம்மதேவன் படைத்தல் தொழிலை மேற்கொண்டார். அப்போது படைத்தல் தொழிலுக்கு உதவியாக ஏழு சப்த ரிஷிகளைப் படைத்தார். அந்த சப்த ரிஷிகளில் ஒருவர் மரீசியும் ஆவார். மரீசியின் மகன் கசியபர் ஆவார்.

கசியபர் பல வேதங்களையும், உபநிடதங்களும் கற்று பண்டித்துவம் பெற்று விளங்கினார். இவர் தட்சப் பிரஜாபதியின் பெண்களில் 13 பெண்களை மணந்து, இந்த பூவுலகில் ஓரறிவு முதல் ஆறறிவு வரையான அனைத்து உயிர்களையும் படைத்தார்.

கசியவருக்கும் கற்புக்கரசியான அதிதிக்கும் பிறந்த குழந்தை தான் சூரியன். இந்த உலகினை ஒளிப்பெறச் செய்யும் கடவுளாக கருதப்படுபவரும் இவரே. நவகிரகங்களில் மிகவும் சக்திவாய்ந்த கிரகமாக கருதப்படும் கிரகம் சூரிய பகவானே, காரணம் அனைத்து கிரகங்களையும் ஆளுமை செய்யும் தன்மை இந்த சூரியனுக்கே உண்டு.

மேலும், மற்ற கிரகங்களை வக்ரம் செய்யும் சக்தியும், அஸ்தமனம் பெற செய்யும் சக்தியும், சூரிய பகவானுக்கு உள்ள சிறப்பு அம்சங்களாகும். சூரியன் சமுக்ஞை(உஷாதேவி), பிரபை, ரைவத இளவரசி ஆகிய மூன்று மனைவிகளை மணந்து இல்வாழ்க்கை நடத்தி வந்தார். இவர்களில் சமுக்ஞையிடம் அதிக பிரியம் கொண்டு இருந்தார். முதல் மனைவியான சமுக்ஞை பட்டத்து ராணியாக திகழ்ந்தார்.

சூரியனுக்கும், சமுக்ஞைக்கும் வைவ சுதமனு, எமன் ஆகிய 2 மகன்களும், யமுனை என்னும் மகளும் பிறந்தனர். சூரியனிடம் வெப்பத்தை குறைத்துக் கொள்ளும்படி பலமுறை சமுக்ஞை சொல்லியும் சூரியன் குறைத்துக் கொள்ளவில்லை.

ஒரு நிலையில் சூரியனின் வெப்பத்தை தாங்க முடியாமல் அங்கிருந்து வெளியேற எண்ணிணார் சமுக்ஞை. தான் இல்லாத இடத்தைப் பூர்த்தி செய்வதற்காக தன்னுடைய நிழலைக் கொண்டு தன்னைப் போன்ற ஒரு பெண்ணை படைத்தார். அந்த பெண்மணியே சாயாதேவி ஆவார்.

சமுக்ஞை, சாயாதேவியிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று சொல்லிக் கொடுத்து விட்டு தன் பிறந்த வீட்டிற்கு சென்று விட்டார். ஆரம்பத்தில் எந்த ஒரு வித்தியாசமும் இன்றி சூரியனிடமும், சமுக்ஞையின் பிள்ளைகளிடம் உண்மையான மனைவி மற்றும் தாயாக நடந்துக் கொண்டாள்.

நாளடைவில் சூரியனுக்கும், சாயாதேவிக்கும் சாவர்ணி, சனி என்ற பிள்ளைகளும், தபதி, விஷ்டி என்ற பெண்களும் பிறந்தனர். தன் பிள்ளைகளிடம் அதிக அன்பை காட்டிய சாயாதேவி, சமுக்ஞையின் பிள்ளைகளிடம் மாற்றான் தாய் போல் நடந்து கொள்கிறார்.

இங்கு நடந்த எல்லாவற்றையும் எமன் அறிந்திருந்தாலும் சாயா தேவியிடம் எந்த பிரச்சனையும் செய்யாமல் அமைதியாக இருந்தார். ஒரு சூழ்நிலையில் சாயா தேவிக்கும், எமனுக்கும் கடுமையான வாக்குவாதங்கள் ஏற்பட்டது.
வாக்குவாதத்தின்போது எமன் சாயாதேவியை கீழே தள்ளி உதைத்தார். இதை பார்த்துக் கொண்டிருந்த சனி எமனிடம் இதை கேட்க, எமன் தன்னிடம் இருந்த கஜாயுதத்தால் சனியின் கால்களை அடித்தார். இதைக் கண்ட சாயாதேவி தன் மகனை அடித்த மற்றும் தன்னை உதைத்த எமனின் கால்கள் அழுகிப் போகட்டும் என சாபமிட்டாள்.

சாயாதேவியின் சாபத்திற்கு ஏற்ப எமனின் கால்கள் அழுகத் தொடங்கின. அழுகிய காலுடன் எமன் சூரியனை காண சென்றார். சூரியனும் எமனின் நிலையை கண்டு நடந்தது என்ன எனக் கேட்டார். எமன் அங்கு நடந்த அனைத்து விஷயங்களையும் சூரியனிடம் கூறினார்.

எனவே, சூரியன், சாயாதேவியை வெறுத்துவிட்டு சமுக்ஞையைத் தேடி சென்றார். அப்போது சமுக்ஞை சூரியனிடம், ஒரு நிபந்தனையை விதித்தார். சூரியனும் அந்த நிபந்தனையை ஏற்று தனது வெப்பத்தை குறைத்துக் கொள்கிறார்.

(சூரியனுடைய அதிகப்படியான வெப்ப சக்தியை வெளியேற்றி சூலாயுதம் மற்றும் சக்ராயுதத்தை உருவாக்கி அதை சிவபெருமானும், விஷ்ணுவும் எடுத்துக் கொண்டனர்.) சாபம் பெற்ற எமனிடம், சிவபெருமானை நோக்கித் தவமிருக்க ஆலோசனைச் சொன்னார் சூரியன். எமனும் சிவபெருமானை நோக்கி கடுமையான தவத்தை மேற்கொண்டு சிவபெருமானின் தரிசனத்தையும்,

ஆசியையும் பெற்று எமதர்மராகி உயிர்களுக்கு ஏற்படும் மரண காலத்தைக் கணக்கிட்டு கடமையாற்றினார்.

அதன்பின் சூரியனும், சமுக்ஞையும் இணைந்தனர். அதன் பயனாக குதிரை வடிவம் கொண்ட இரட்டைக் குழந்தைகள் பிறந்தனர். அந்த இரண்டு குழந்தைகளுக்கு அஸ்வினி தேவர்கள் என்று பெயர் சூட்டப்பட்டது.

நட்சத்திர தொகுப்பில் அஸ்வினி தேவர்களே முதன்மையானவர்கள். சனி பகவானும் நவக்கிரக அந்தஸ்து பெற்று நவகிரகங்களில் ஒருவரானார். சூரியனுடைய அனைத்து புத்திரர்களுமே உயர்ந்த நிலையை அடைந்தார்கள்.

எனவே, ஒருவர் ஜாதகத்தில் சூரியன் அமையும் நிலையைப் பொருத்தே களத்திர தோஷம், புத்திர தோஷம், உத்தியோக பிரபந்த தோஷம், வித்யா பிரபந்த தோஷம் போன்றவைகளும் ஏற்படுகின்றன.

**சூரிய பகவானும், அவர் தரும் தோஷமும் :**

ஒருவருடைய லக்னத்தில் சூரியன் நின்றால், அவர் முன் கோபம் கொண்டவராய் இருப்பார்.

லக்னத்திற்கு 5-ல் சூரியன் நின்றால், தனது சுகத்தை தானே கெடுத்து கொள்வார் மற்றும் புத்திர பாக்கியம் குறைவு.

லக்னத்திற்கு 7-ல் சூரியன் நின்றால் காலதாமதமான திருமணம் அமையும்.

**சூரிய காயத்ரி மந்திரம் :**

ஓம் அஸ்வத்வஜாய வித்மஹே
பாஸ அஸ்தாய தீமஹி
தன்னோ சூர்ய ப்ரசோதயாத்

**சூரிய பகவானுக்கான பரிகாரம் :**

ஒருவருடைய ஜாதகத்தில் சூரியன் நீசம் பெற்றும், ஜாதகத்தில் ஏதாவது ஒரு இடத்தில் நின்று தோஷம் தருமாயின், ஆடுதுறை சூரியனார் கோவில் சென்று மனதார சூரியனை வணங்கி பரிகாரம் செய்ய வேண்டும்.

இக்கோவில் சூரிய பகவானுக்கு பரிகாரம் செய்ய முதன்மையான கோவிலாகும்.

## சந்திர பகவான்



உயிரினங்களை படைக்கும் கடவுளான பிரம்மதேவரின் கட்டளைப்படி மகரிஷிகள் பூமியில் மனித இனங்களை பெருக்க காரணமாக இருந்தார்கள். மனித இனத்தை பெருக்கம் அடைய செய்த ரிஷிகளில் அத்திரி மகரிஷியும் ஒருவர்.

அத்திரி ரிஷி மற்றும் அனுசுயா தேவி மும்மூர்த்திகளின் அனுக்கிரகத்தால் மூன்று குழந்தைகளை ஈன்றெடுத்தனர். மும்மூர்த்திகளின் அனுக்கிரகத்தால் இந்த பூவுலகில் மூன்று குழந்தைகளும் பிறந்தார்கள். அவர்கள்,

1. சோமன்
2. துர்வாசன்
3. தத்தாத்ரேயன்

இவர்களில் துர்வாசன் வேதங்கள் பலவற்றை கற்று இறைவனிடத்தில் அன்பு கொண்டு மகரிஷி ஆகிவிட்டார். தத்தாத்ரேயன் தேவ கணங்களில் இணைந்துவிட்டார். சோமன் நவக்கிரங்களில் இணைந்து சந்திரன் என்று அழைக்கப்படுகிறார்.

## இந்த மூவரும் உருவானது எப்படி?

அத்திரி மகரிஷியும், அனுசுயா தேவியும் தம்பதிகளாக இணைந்து வாழ்ந்து கொண்டிருந்தனர். அனுசுயா தேவியின் பத்தினித் தன்மையை சோதிக்க மும்மூர்த்திகளாகிய சிவன், பிரம்மா மற்றும் விஷ்ணு அவர்களிடம் முனிவர்களாக சென்று யாசகம் கேட்கின்றனர். அத்திரி மகரிஷி தம்பதிகள் மூன்று முனிவர்களையும் இல்லத்திற்கு வரவேற்று அவர்களை உபசரித்தனர்.

முனிவர்கள், தங்களை உபசரிக்கும் முன் ஒரு நிபந்தனை இருக்கின்றது, நிபந்தனையை ஏற்றுக்கொள்வாயின் நாங்கள் தங்களின் விருந்தை ஏற்றுக் கொள்வோம் என கூறினர். முனிவர்களிடம் நிபந்தனையை என்னவென்று கேளாமல் தங்களின் நிபந்தனையை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என தம்பதியினரும் உறுதி அளிக்கின்றனர். மகிழ்ந்த மும்மூர்த்திகளும் தங்கள் நிபந்தனை என்னவென்று கூறினார்கள்.

நிபந்தனையை கேட்ட தம்பதியினர் அதிர்ச்சி மற்றும் திகைப்படைந்து நின்றனர். நிபந்தனை என்னவென்றால் விருந்தை பரிமாறும்போது தேவி அவர்கள் நிர்வாண கோலத்தில் பரிமாற வேண்டும் என்பதாகும். என்ன செய்வதென்று தெரியாமல் கொடுத்த வாக்கினை காப்பாற்ற தம்பதியினரும் விருந்தினை தயார் செய்கின்றனர்.

விருந்தினை பரிமாறும் நேரத்தில் அனுசுயா தேவி தன் பத்தினித் தன்மையால் மும்மூர்த்திகளை பச்சிளம் பாலகர்களாக மாற்றி அவர்கள் சொன்ன நிபந்தனைப்படி அவர்களுக்கு உணவை பரிமாறினார்கள். மும்மூர்த்திகளும் பச்சிளம் பாலகர்களாக அத்திரி மகரிஷியின் வீட்டில் இருக்கின்றனர் என்பதை நாரத மகரிஷி மூலம் முப்பெரும் தேவிகளான பார்வதி, சரஸ்வதி மற்றும் மகாலட்சுமி அறிந்து கொள்கின்றனர்.

முப்பெரும் தேவிகளும் அத்திரி மகரிஷியின் தம்பதி முன்னர் தோன்றி வந்து தாங்கள், யார் என்பதை கூறி அவர்களை மீண்டும் பழைய நிலைக்கு மாற்றி தர வேண்டும் என கேட்கின்றனர். இதை அறிந்த தம்பதிகள் உலகில் உள்ள எல்லா இன்பங்களையும் அனுபவித்து மகிழ்ச்சியின் எல்லைக்கே சென்றுவிட்டனர்.

நிகழ் உலகிற்கு வந்த தம்பதிகள், தேவிகள் கேட்டபடியே மும்மூர்த்திகளை பழைய நிலைக்கு மாற்றிவிட்டனர். அவர்கள் பழைய நிலைக்கு வந்தவுடன் முப்பெரும் தேவி மற்றும் மும்மூர்த்திகளும் ஒரே இடத்தில் நிற்கும் கண்கொள்ளா காட்சியை கண்டு மெய்மறந்து நின்றனர்.

மும்மூர்த்திகளும் தங்களின் பழைய நிலையை அடைந்தவுடன் தாங்கள் வந்த நோக்கத்தை அவர்களிடம் கூறினர். அதாவது தம்பதியினரை சோதித்து அனுசுயா தேவியின் பத்தினித் தன்மையை உலகறிய செய்யவே இந்த திருவிளையாடலை நடத்தியதாக மும்மூர்த்திகள் கூறினர்.

தம்பதிகள் பட்ட துன்பங்களை மறந்து அகம் மகிழ்ந்தனர். மும்மூர்த்திகளும் தாங்கள் மகிழ்ந்ததை எண்ணி தாங்களுக்கு வேண்டும் வரத்தை கேட்கச் சொன்னார்கள்.

மும்மூர்த்திகள் கேட்கச் சொன்ன பேரில் தம்பதிகள் தங்களுக்கு புத்திர செல்வம் அருளும் படி வேண்டினர். மும்மூர்த்திகளும் அவர்கள் கேட்ட வரத்தை கொடுத்தனர்.

அவர்களின் அனுகிரகத்தால் அத்திரி ரிஷிக்கும், அனுசுயா தேவி தம்பதியினருக்கும் மூன்று குழந்தைகள் பிறந்தனர்.

## சிவபெருமானுக்கும், சந்திரனுக்கும் போர் ஏற்படக் காரணம்?

அத்திரி ரிஷி மற்றும் அனுசுயா தேவிக்கு பிறந்த மூன்று குழந்தைகளில் முதலாவது குழந்தை சந்திரன் ஆவார். இவர் மகாவிஷ்ணுவை நோக்கி பல காலங்கள் தவம் இருந்து பல வரங்களைப் பெற்று மாவீரனாகவும், மகாராஜனாகவும் வாழ்ந்தார்.

சந்திரனுக்கு தன்னுடைய 27 பெண்களையும் திருமணம் செய்து வைத்தார் தட்ச பிரஜாபதி. திருமணத்தின்போது தட்ச பிரஜாபதி, சந்திரனிடம் இருந்து ஒரு உறுதிமொழியை பெற்றுக்கொள்கிறார்.

அதாவது சந்திரன் தனது 27 மனைவிகளிடமும் சம அளவிலான அன்பினை செலுத்த வேண்டும். எந்த மனைவிக்கும் வேறுபாடு பார்க்கக்கூடாது என்பதே உறுதிமொழி ஆகும். சந்திரன் சம்சார பந்தத்தில் ஈடுபட்டு வாழத் தொடங்கினார்.

ஒருநாள் சந்திரன் ராஜசூய யாகம் நடத்த எண்ணினார். யாகம் நடத்துவதற்கு முன்பாக பிரம்மலோகம் சென்று நான்முகனான பிரம்மதேவரை வணங்கி ஆசி பெற்றார்.

பின் தேவலோகத்திற்கு சென்று இந்திரனையும் மற்றும் பல தேவர்களையும், அவர் நடத்தும் ராஜசூய யாகத்தில் கலந்து கொள்ள அழைப்பு விடுத்தார்.

தேவர்களின் குருவான பிரகஸ்பதியை நேரில் கண்டு தான் நடத்தும் யாகத்திற்கு தாங்கள் வந்து முன்னிலை வகித்து யாகத்தை நடத்தி தர வேண்டும் என பணிந்தார். சந்திரனுக்கு பல கலைகளை குருவாக இருந்து கற்று கொடுத்தவர் குருபகவான் பிரகஸ்பதி ஆவார்.

ஆனால், ஏதோ ஒரு காரணத்தால் குரு தன்னால் வர இயலாது எனவும், அதற்கு பதிலாக தனது துணைவியான தாராதேவியை யாகத்திற்கு அனுப்பி வைப்பதாகவும் கூறினார்.

சந்திரன் ராஜசூய யாகம் நடத்த ஆரம்பித்தார். யாகம் நடக்க நடக்க சந்திரனின் அழகும், தேஜசும் பல மடங்கு அதிகரித்து பரிபூரண இளமை பெற்று உயர்ந்தார். அவரது அழகில் மயங்கி பல தேவமாதர்கள் அவர்மீது ஆசையும், மோகமும் கொள்ள ஆரம்பித்தனர். அதில் குருவின் மனைவியான தாராதேவியும் சந்திரனின் அழகில் மயங்கி அவர்மீது ஆசைப்பட்டார்.

தேவமாதர்கள் சந்திரனின் மீது மோகம் கொள்வதை அறிந்த தேவர்கள், அவர்மீது பொறாமையையும், அதிருப்தியையும் கொண்டனர். யாகம் முடிந்ததும் தேவர்கள் தனது தேவிகளுடன் தேவலோகம் செல்ல முயற்சித்தப்போது பல தேவிமார்கள் வர மறுத்து சந்திரன் உடனேயே தங்கி கூடி மகிழ்ந்தனர். அதில் குருவின் மனைவியான தாராதேவியும் ஒருவர்.

தேவமங்கையர்கள் சிறிது காலம் கழித்து தேவலோகத்திற்கு சென்றனர். ஆனால், தாராதேவி செல்லவில்லை. முதலில் தயங்கிய சந்திரன், அவரின் அழகில் மயங்கி தன் குருவின் மனைவி என்பதனையும் மறந்து தாராதேவியுடன் கூடி மகிழ்ந்தார்.

யாகம் முடிந்தும் தாராதேவி வராததால் குரு, தன் தூதர்களை அனுப்பி அழைத்து வரச் சொன்னார். எனினும் தாராதேவி வரவில்லை. குரு சந்திரனிடம் தன் துணைவியை அனுப்பி வைக்கும்படி கேட்டபோது சந்திரன், அவர்கள் வந்தால் அழைத்துச் செல்லுங்கள் நான் அவர்களை கட்டாயப்படுத்தி அனுப்பி வைக்கமாட்டேன் என்று கூறினார்.

குரு எவ்வளவோ முயன்றும் தன் துணைவியை அழைத்துப் போக முடியவில்லை. இறுதியில் இந்தப் பிரச்சனை சிவபெருமானிடம் சென்றது. சிவபெருமான் சந்திரனை அழைத்து தாராதேவியை குருவுடன் அனுப்பி வைக்கும்படி கூறினார். ஆனால் சந்திரன், சிவபெருமானின் உத்தரவுக்கும் கட்டுப்படவில்லை.

சந்திரன், தாராதேவி என்னுடன் விருப்பப்பட்டு உள்ளார். என்னிடம் அடைக்கலம் என்று வந்தவர்களை விரட்டுவது சத்திரிய தர்மம் அல்ல. அடைக்கலம் கொடுப்பது தான் தர்மம் என்று கூறினார். தன் உத்தரவுக்கு கட்டுப்படாத சந்திரனின் மீது சிவபெருமான் கோபம் அடைந்து போர் தொடுத்தார்.

## பிரம்மதேவரிடம் சாபம் வாங்குதல் :

சிவபெருமானுக்கும், சந்திரனுக்கும் ஏற்பட்ட போரினால் இந்த பிரபஞ்சமே பாதிக்கப்பட்டது. பிரபஞ்சத்தில் ஏற்பட்ட அழிவுகளை கண்ட தேவேந்திரன், பிரம்மதேவரிடம் சென்று ஏற்பட்ட அழிவுகளை கூறினார். மேற்கொண்டு போர் தொடர்ந்தால் இந்த பிரபஞ்சம் அழிவைச் சந்திக்கும் எனவும் கூறினார்.

எனவே பிரம்மதேவர் போரின் நிலையையும், அதனால் ஏற்பட்ட விளைவுகளையும் அறிந்து சந்திரனை அழைத்து, தாராதேவியை குருதேவருடன் அனுப்பும்படி கூறினார். அதற்கு சந்திரன், நான் தாராதேவியை கட்டாயப்படுத்தி என்னுடன் வைத்திருக்கவில்லை. அவர்கள் விருப்பப்பட்டால் செல்லட்டும் நான் அவர்களை தடுக்கவில்லை எனக் கூறினார்.

தாராதேவி தன்னுடன் விருப்பப்பட்டு தங்கிவிட்டதால், தன்மீது தவறு எதும் இல்லை என சத்திரிய தர்மத்தை பிரம்மதேவருக்கே உபதேசித்தார். சத்திரிய தர்மத்தை பற்றி பிரம்மதேவருக்கே உபதேசம் செய்ததால் கோபம் அடைந்த பிரம்மதேவர், சந்திரனை பாவியாக போகும்படி சாபமிட்டார்.

## சாபத்திற்கான பரிகாரத்தை பிரம்மதேவர் அருளுதல் :

இதனால் அதிர்ச்சியடைந்த சந்திரன், அடைக்கலம் என்று என்னிடம் வந்த தாராதேவிக்கு அடைக்கலம் கொடுக்க வேண்டியது சத்திரியனான தன் கடமை என்பதை வலியுறுத்தினார். இதனால் கோபம் தணிந்த பிரம்மதேவரும், சந்திரன் மீது உள்ள உண்மையை அறிந்து சாபத்திற்கான பரிகாரத்தினை கூறினார்.

மேலும், நான் வழங்கிய சாபம் விலக வேண்டுமாயின் தாராதேவியை குருவுடன் இணைத்து வைக்க வேண்டும். குருவின் கனிந்த பார்வையால் நான் இட்ட சாபம் விலகும் என்று கூறினார்.

## சந்திரன் சாப நிவர்த்தி பெறுதல் :

எனவே, சந்திரன் போரை நிறுத்திவிட்டு சிவபெருமானிடம் தான் செய்த தவறை மன்னிக்க வேண்டும் என வேண்டினார். தன் தவறை உணர்ந்த சந்திரனை சிவபெருமானும் மன்னித்தார்.

பின்னர் சந்திரன், தாராதேவிக்கு தகுந்த அறிவுரைகளை கூறி குருதேவருடன் இணைத்து வைத்தார்.

குருதேவரும் நடந்த அனைத்து விஷயங்களையும் மறந்து தாராதேவியை ஏற்றுக்கொண்டார். பின்னர் சந்திரனின் சாபம் நீங்க குருதேவரும் அருள் புரிந்தார்.

## தட்ச பிரஜாபதி, சந்திரனுக்கு சாபமிட காரணம் என்ன?

தாராதேவி கருவுற்றாள், தான் கருவுற்றதற்கு காரணம் சந்திரன் என தன் கணவரான குருதேவரிடம் கூறினார். பின் தாராதேவி ஒரு அழகான ஆண் குழந்தையை ஈன்றெடுத்தாள். அந்த குழந்தையை தாராதேவியுடன் வளர விரும்பாத குருதேவர், சந்திரனை அழைத்து அந்த குழந்தையை சந்திரனிடமே ஒப்படைத்தார். குழந்தையை பெற்றுக்கொண்ட சந்திரனும், தன் 27 தேவிமார்களையும் அழைத்து, அந்த குழந்தையை தன் குழந்தை போல் வளர்க்கச் சொல்கிறார். பின்பு, அந்த குழந்தைக்கு புதன் என பெயர் சூட்டினார்.

## தேவிமார்களிடம் பாகுபாடு :

சந்திரன் கூறிய வார்த்தைகளை மதித்து 27 தேவிமார்களில் கார்த்திகை, ரோகிணி தேவிமார்கள் மட்டும் புதனை நன்றாக அன்புடன் வளர்த்தார்கள். இதில் கார்த்திகையை விட ரோகிணியே அதிக பாசத்துடன் புதனை வளர்த்தார்.

அதனால் சந்திரன் அந்த இரண்டு தேவிமார்களிடம் மட்டும் அதிக அன்பையும், நேரத்தையும் செலவிட்டார்.

மற்ற தேவிமார்களை சந்திரன் அலட்சியம் செய்தார். இதனால் கோபம் அடைந்த 25 தேவிமார்கள் தன் தந்தையான தட்ச பிரஜாபதியிடம் சென்று இங்கு நடந்தவற்றை கூறி, சந்திரன் தங்களுடன் அன்புடனும், நேசத்துடனும் நடந்து கொள்ளச் சொல்ல வேண்டும் என்று கூறுகிறார்கள்.

## தட்ச பிரஜாபதியிடம் சந்திரன் சாபம் பெறல் :

தன் மகள்கள் கூறியதைக்கேட்டு தட்ச பிரஜாபதி கோபம் கொண்டு, சந்திரனை அழைத்து நடந்தவற்றை எதையும் கேட்காமல், தன் மகள்கள் கூறியதை கேட்டு சந்திரனுக்கு சாபமிட்டார்.

தன் மகள்களை கவரக் காரணமாக இருந்த கலைகள், அதாவது சந்திரனின் அழகு பதினைந்து நாட்களில் தேய்ந்து போகும் படி சாபமிடுகிறார்.

சந்திரன் பல வரங்கள் பெற்றவராயினும், பல ஆயிரம் ஆண்டுகள் கடும் தவமிருந்து சிவபெருமானிடம் பல வரங்கள் மற்றும் அரிய சக்திகளை பெற்றவர் தட்ச பிரஜாபதி. எனவே அவரின் சாபத்தை தடுத்து நிறுத்தும் சக்தி தனக்கில்லை என்பதை உணர்ந்தார் சந்திரன்.

## சிவபெருமான் சாப விமோசனம் அளித்தல் :

கயிலாயத்திற்கு சென்ற சந்திரன் நடந்த அனைத்து நிகழ்வுகளையும் சிவபெருமானிடம் கூறினார். எதிரிக்கும் அருளும், விருப்பு வெறுப்பு இல்லாத சிவபெருமானும் சந்திரன் மீதுள்ள உண்மையை அறிந்து அவருக்கு சாப விமோசனம் அளித்தார்.

சந்திரன் தன்னை எதிர்த்து போர் செய்தாலும், சந்திரனின் பிறப்பின் ரகசியம் அறிந்த சிவபெருமான் சந்திரனின் மீதி இருந்த ஒரு கலையை தன் முடியில் சூட்டிக் கொண்டார்.

சிவபெருமான் கட்டிக் கொண்ட அந்த ஒரு கலை மட்டும் என்றும் அழியாமல் நிலைத்து நிற்கும் என கூறுகிறார்.